DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -3

| | | |
|---|---|---|
| Name | : திரு. செல்வராஜ் | Caste: |
| Father's Name: | திரு. மாணிக்கம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 6th day of June - 2023.

A1 and A3 to A6 present.

**06.06.2023.**

**முதல் விசாரணை**

நான் அரியானூர் தட்டாமரைக்காட்டில் வசித்து வருகிறேன். நான் கேபிள்டிவி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர் இல்லை. இறந்துபோன விஜயன் என்பவரை தெரியும். அவர் எனது வீட்டிலிருந்து சற்று தொலைவில் வசித்து வந்தார். அவரும் எனது உறவினர் இல்லை.

கடந்த 01.09.2014 அன்று இரவு நேரத்தில் எனது வீட்டிற்கு உறவினர்கள் வந்திருந்தார்கள். அவர்களை அழைத்து சென்று அரியானூரில் உள்ள அவர்களில் வீட்டில் விட்டு விட்டு இரவு சுமார்.10.30 மணி அளவில் நான் எனது வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டேன். அதற்கு மறுதினம் காலை நேரத்தில் காலை கடன் கழிப்பதற்காக சுமார் 6.30 மணியவில் பேக்காட்டில் உள்ள பழனிச்சாமி தென்னந்தோப்புக்கு சென்றேன்.

அங்கே சிலபேர் கும்பலாக இருந்தார்கள். அங்கிருந்த பழனிவேல் என்பவர்

அவரது பங்காளி விஜயன் என்பவரை கொலை செய்துவிட்டார்கள் என்று சத்தம் போட்டு கொண்டிருந்தார். நான் சென்று பார்த்தபோது சவம் ஒரு பக்கமாக ஒருக்கழித்து கிடந்ததால் அதனை என்னால் அடையாளம் பார்க்கமுடியவில்லை. நான் 10 அடி தொலையில் இருந்து பார்த்ததால் பிரேதத்தில் என்ன காயங்கள் இருந்தது என்று நான் பார்க்கவில்லை.

பழனிவேல் என்பவர் என் முன்பாக விஜயனின் சகோதரி கலாவதி என்பவருக்கும் மற்றும் அவரது பங்காளிகளுக்கும் போன் மூலம் தகவல் தெரிவித்தார். போலிசாருக்கும் அவர் தகவல் தெரிவித்தார். அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் பதற்றமாக இருந்ததால் மேற்படி சம்பவமானது எப்படி ஏற்பட்டது என்று நான் விசாரிக்கவில்லை. அதிலிருந்து 1 வாரம் கழித்து போலிசர் என்னை மீண்டும் விசாரித்தார்கள்.

அதிலிருந்து சுமார் 2 மாதங்கள் கழித்து செய்தித்தாளில் வந்த தகவலின் அடிப்படையில் 1ஆம் எதிரியும் அவரது சகாக்களும் விஜயன் கொலை சம்மந்தமாக நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன்.

(சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

01.09.2014 ஆம் தேதியன்று இரவு நேரத்தில் நான் அரியானூரில் இருந்து எனது வீட்டிற்கு திரும்ப வந்தபோது பழனிச்சாமி என்பவரது தென்னந்தோப்பிற்கு அருகில் உள்ள வலைவில் ஒரு TVS XL வண்டி மட்டும் தனியாக ஸைடு ஸ்டேண்ட் போட்ட நிலையில் இருந்தது என்றும், அதனை எனது வாகனத்தின் லைட் வெளிச்சத்தில் நான் பார்த்ததாகவும், அது யாருடைய வண்டி என்று எனக்கு தெரியவில்லை என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

நான் செல்போன் வயிலாக எனக்கு தெரிந்தவர்களுக்கு போன் செய்து அந்த வண்டி குறித்து விசாரித்தாகவும், அவர்கள் அந்த வாகனம் தங்களுடையது இல்லை என்று சொன்னதால் நான் எனது வண்டியிலிருந்து இறங்கி மேற்படி TVS XL

வண்டியில் இருந்த சாவியை எடுத்து அதனை ஸைடு லாக் செய்துவிட்டு சாவியை அதிலேயே விட்டுவிட்டு நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டதாக நான் போலிசர் விசாரணையில் சொல்லவில்லை. நான் மறுதினம் அந்த இடத்திற்கு வந்தபோதும் அந்த வாகனம் அந்த இடத்திலேயே இருந்ததை நான் பார்த்துவிட்டு அதற்கு பிறகு பழனிச்சாமியின் தென்னந்தோப்பிற்கு சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை.

நான் தான் விஜயனின் பிரேதத்தை முதலில் பார்த்தேன் என்றும், நான் சத்தம் போட்டதை கேட்டு தான் அக்கம்பக்கம் இருந்தவர்களும், பழனிச்சாமியும் அந்த இடத்திற்கு வந்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு 1ஆம் எதிரி உள்ளுரை சேர்ந்தவர் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகளை மறைத்து தற்போது பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem.